C.C.No.212/2018 06.04.2026

PW 1 சிவனாயி த/பெ. ராஜா

( சாட்சி சத்தியப்பிரமாணம் செய்யப்பட்டு சாட்சி விசாரணை பதிவு செய்யப்பட்டது ).

**எதிரிதரப்பில் குறுக்குவிசாராணை தொடர்ச்சி**

எங்களுக்கும், எதிரிகளுக்கும் இடையே பாதை சம்மந்தமாக பிரச்சனை உள்ளது என்றால் சரிதான். அதனால் எதிரிகளுடன் பல ஆண்டுகளாக எங்களுக்கு பேச்சு வார்த்தை இல்லை என்றால் சரிதான். அந்த இடம் யார் பெயரில் உள்ளது என்றால் அதுபற்றி எனக்கு தெரியாது. இடத்தை பணம் கட்டி அளந்ததாக சொல்லியுள்ளேன், யார் பெயரில் பணம் கட்டினோம் என்றால் எனது பெயரியல் பணம் கட்டினோம். போலீசார் விசாரணையில் பணம் கட்டிய ரசீதை ஆவணமாக கொடுத்துள்ளேனா என்றால் கொடுத்துள்ளேன். அவ்வாறு பணம் கட்டி அளந்து வரைபடம் செய்த ஆவணத்தை போலீசாரிடம் கொடுத்துள்ளேனா என்றால் கொடுத்துள்ளேன். நான் சொல்லும் இடம் துரைபாண்டியன் என்பவருக்கு பாத்தியப்பட்ட இடம் என்றால் துரைபாண்டியின் அப்பாவிடமிருந்து நான் பெற்ற இடம். அவ்வாறு துரைபாண்டி தந்தையிடமிருந்து வாங்கியதற்கான ஆவணம் எதுவும் உள்ளதா என்றால் உள்ளது. அதை போலீசாரிடம் கொடுத்துள்ளேனா என்றால் கொடுத்துள்ளேன். நிலம் அளந்தது எந்த தேதியன்று எனக்கு தெரியுமா என்றால் தெரியாது.

2) எதிரிகள் கல்லை பிடுங்கியதாக சொல்லியுள்ளேன் அந்த பிடுங்கிய கல்லை போட்டோ எடுத்து அதை போலீசாரிடம் கொடுத்துள்ளேனா என்றால் இல்லை. துரைபாண்டியன் மைத்துனன் கருப்பையா என்றால் சரிதான். துரைபாண்டியன் மகள் முத்து மீனா என்றால் சரிதான். முத்து மீனாவின் தனது மாமியார் பஞ்சவர்ணம் மற்றும் பாண்டியம்மாள் என்றால் சரிதான். இவர்கள்தான் பாதையை பணம் கட்டி அளந்தார்கள் என்றால் பலமுறை அளந்துள்ளார்கள், சம்பவத்திற்கு முன்னர் எனது மகன்தான் பணம் கட்டி அளந்தார். எதிரிதரப்பினர்கள் அளந்த பின்னர் மறுநாள் நாங்கள் கல் கால்களை பிடுங்கி போட்டோம் என்றால் சரியல்ல. இதனால் எங்களுக்கும் எதிரிதரப்பினர்களுக்கும் தள்ளு, முள்ளு ஏற்பட்டது என்றால் சரியல்ல.

3) நான், எனது மகள், மகன் ஆகியோர்கள் சேர்ந்து கம்பு கொண்டு கருப்பையாவை தலையிலும், வலது தோள்பட்டை, இடது கையில் அடித்து ரத்தக்காயம் ஏற்படுத்தினோம் என்றால் சரியல்ல. 4 ம் எதிரி முத்து மீனாவையும், 3 ம் எதிரி கருப்பையாவையும் அடித்து அவருக்கு ஏற்பட்ட காயத்திற்கு மேலூர் அரசு மருத்துவமனையில் சேர்க்கப்பட்டார்கள் என்றால் சரியல்ல. எதிரிகள் எங்கள் தரப்பினர்கள் மீது கொடுத்த வழக்கு இந்நீதிமன்றத்தில் CC No 32/2023 ஆக நிலுவையில் இருந்து வருகிறது என்றால் சரிதான், அது பொய் வழக்கு. எதிரிகள் தரப்பினர்கள் அடித்து நான் புகார் அவர்கள் மீது காவல் நிலையத்தில் புகார் கொடுத்தேன் என்றால் சரிதான். எங்கள் ஊரிலிருந்து மேலூர் காவல் நிலையத்திற்கு எங்கள் ஊர் அன்றைய தலைவர் காரை வைத்து அழைத்து வந்தார் என்றால் சரிதான். நான் புகாரில் எதிரிகள் ஆளுக்கொரு கடப்பாறை கொண்டு தாக்கினார்கள் என்று சொல்லியுள்ளேன் என்றால் சரிதான். சம்பவத்தன்று எத்தனை கடப்பாறை சம்பவ இடத்தில் கிடந்தது என்றால் மயக்கம் அடைந்து விழுந்ததனால் எனக்கு தெரியவில்லை. சம்பவ இடத்தில் அந்த கடப்பாறை சம்பவ இடத்தில் கிடந்தது என்றால் சரிதான். அந்த கடப்பாறையின் தன்மை எனக்கு தெரியுமா என்றால் 8 அடி இருக்கும்.

4) எந்த தேதியில், எத்தனை மணிக்கு அரசு மருத்துவமனையில் சேர்க்கப்பட்டேன் என்றால் தேதி ஞாபகம் இல்லை, மாலை 06.00 மணி இருக்கும். எத்தனை நாட்கள் மேலூர் அரசு மருத்துவமனையில் சிகிச்சையில் இருந்தேன் என்றால் 1 வாரம் சிகிச்சையில் இருந்தேன், அதன்பின்னர் அஸ்வின் மருத்துவமனையில் சேர்ந்தேன். எத்தனை மாதம் அஸ்வின் மருத்துவமனையில் சிகிச்சையில் இருந்தேன் என்றால் 4 மாதம் இருந்தேன். அஸ்வின் மருத்துவமனையில் சிகிச்சை எடுத்துக்கொண்டதற்கான ஆவணம் போலீசாரிடம் கொடுத்துள்ளேனா என்றால் கொடுத்துள்ளேன். எனது புகாரில் எங்களுக்கு ஏற்பட்ட சண்டையை விலக்கிவிட்டார்கள் என்று சொல்லியுள்ளேன், யார் விலக்கிவிட்டார்கள் என்று குறிப்பிட்டு சொல்லவில்லை என்றால் சரிதான். சம்பவத்தின்போது ஏற்பட்ட காயத்திலிருந்து ரத்தம்படிந்த

துணிகளை போலீசாரிடம் கொடுத்தேனா என்றால் கொடுத்தேன்.

5) சம்பவம் நடந்த சமயத்தில் அய்யன்கோவில் திருவிழா நடந்தது என்றால் சரியல்ல. சம்பவம் நடந்த சமயத்தில் தெரு விளக்கு அனைந்திருந்தா என்றால் விளக்கை அணைத்துவிட்டு வந்துதான் எங்களை தாக்கினார்கள். சம்பவம் இருட்டான சமயத்தில், திருவிழாவில் நடந்த கலவரத்திலிருந்தவர்கள் சேர்ந்து என்னை அடித்ததால்தான் எனக்கு காயம் ஏற்பட்டது என்றால் சரியல்ல. அதை மறைத்து பொய்யாக சாட்சியம் அளிக்கிறேன் என்றால் சரியல்ல.

6) நான் முதல் விசாரணையில் சொன்னதுபோல் முத்துகருப்பனுக்கு சொந்தமான இடத்தில் நான் குடியிருந்து வருவதாக சொல்லியுள்ளேன், ஆனால் அந்த விவரத்தை போலீசார் விசாரணையில் சொல்லவில்லை என்றால் சரியல்ல. நான் வசித்து வரும் வீடு முத்துமீனாவின் அப்பாவிடமிருந்து வாங்கியுள்ளேன் என்று முதல் விசாரணையில் சொல்லியுள்ளேன் அந்த விவரத்தை போலீசார் விசாரணையில் சொல்லியுள்ளேனா என்றால் சொல்லியுள்ளேன். சம்பவத்தின்போது எதிரிகள் பயன்படுத்தியதாக சொல்லப்படும் வார்த்தைகளை போலீசார் விசாரணையில் சொல்லியுள்ளேனா என்றால் சொல்லவில்லை. இவ்வழக்கில் நீக்கப்பட்ட இளையராஜா, பெரியண்ணன், அவர்களுடன் சேர்ந்து 5 ம் எதிரி மதுரை வீரன் எனது தலை இடதுபக்கத்திலும், இடது கையிலும் அடித்து ரத்தக்காயம் ஏற்படுதினார்கள் என்று முதல் விசாரணையில் சொல்லியுள்ளேன், அந்த விவரத்தை போலீசார் விசாரணையில் சொல்லியுள்ளேனா என்றால் சொல்லியுள்ளேன். சம்பவ சமயத்தில் நான் மயங்கி விழுந்த விவரத்தை போலீசார் விசாரணையில் சொல்லியுள்ளேனா என்றால் சொல்லியுள்ளேன். எனது மகள் அண்ணப்பூரணிக்கு, எனது மருமகன் அய்யங்களை ஆகியோர்களுக்கு ஏற்பட்ட காயம் திருவிழா கலவரத்தில் ஏற்பட்ட காயம் என்றால் சரியல்ல, அங்கு திருவிழாவே நடைபெறவில்லை. எனது முதல் விசாரணையில் நான் சொல்ல சொல்லதான் எனது மகள் தான் எழுதினாள் என்று சொல்லியுள்ளேன், அந்த விவரத்தை போலீசார் விசாரணையில் சொல்லியுள்ளேனா என்றால் சொல்லியுள்ளேன்.

7) நாங்கள் அனைவரும் சேர்ந்து எதிரிகளை அடித்து காயப்படுத்தினோம், அதை மறைப்பதற்காகத்தான் திருவிழாவில் ஏற்பட்ட காயத்தை மறைத்து உண்மைக்கு புறம்பாக எதிரிகள் எதிராக சாட்சியம் அளிக்கிறேன் என்றால் சரியல்ல. எதிரிகளுக்கும், இந்த வழக்கிற்கும் எந்த சம்மந்தமும் இல்லை என்றால் சரியல்ல.

குறுக்குவிசாரணை இத்துடன் முடித்துவைக்கப்படுகிறது.